பெண்கள் கர்ப்பப்பை வாய் பகுதியை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால், கர்பப்பை வாய் புற்றுநோய் தாக்கும். இதனை, தடுக்க தனியாக தடுப்பூசியே உள்ளது. இந்த நோய் தாக்கினால் 100க்கு 50 பேர்தான் உயிர் பிழைக்க வாய்ப்புள்ளது. ஆரம்பத்திலேயே இதை கண்டுபிடித்து விட்டால், புற்றுநோயை உடனடியாக குணப்படுத்தி விடலாம். இதற்கு ஆண்டுதோறும் மாஸ்டர் ஹெல்த் செக்அப் செய்துகொள்வது நல்லது. கேன்சர் பற்றிய விழிப்புணர்வு நமக்கு இன்னும் அதிகளவில் ஏற்பட வேண்டும். எந்த தியேட்டரில் என்ன படம் ஓடுகிறது? என்றுதான் பலர் இன்னும் ஆராய்ச்சி செய்கிறார்கள். எந்த ஹோட்டலுக்கு சென்றால், என்ன சாப்பாடு வாய்க்கு ருசியாக கிடைக்கும் என இன்னும் சிலர் ஆராய்கிறார்கள். ஆனால், கேன்சரை பற்றிய தெளிவு நம்மிடம் இன்னும் அதிகளவில் ஏற்படவில்லை. சில பெண்களுக்கு, மார்பகத்தில் சிறிய அளவிலான கட்டி இருக்கும். ஆனால், அதை வெளியே சொல்லமாட்டார்கள். அப்படி விட்டுவிடக்கூடாது. உடனே, பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். பெண்களுக்கு மாதவிடாய் காலத்துக்கு பிறகு, பிறப்புறுப்பில் ரத்தம் வந்தால் கேன்சராக இருக்கலாம். அதை அலட்சியமாக விட்டுவிடக்கூடாது. கே.ஜி.போன்ற நல்ல மருத்துவமனையை அணுகவேண்டும். கே.ஜி மருத்துவமனையில், பெண்களுக்கு கேன்சர் சிகிச்சை அளிக்க பிரத்யேகமாக தலைசிறந்த மருத்துவர்கள் 6 பேர் உள்ளனர். மூளை புற்றுநோய், குடல் புற்றுநோய் சிகிச்சைக்கு ஸ்பெஷலிஸ்ட்கள் உள்ளனர். நாட்டில் தலைசிறந்த 12 புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் கே.ஜி.யில் மக்கள் சேவையாற்றுகின்றனர். கேன்சரை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிக்க எல்லாவிதமான கருவிகளும் கே.ஜி.யில் உள்ளன. எக்ஸ்ரே, எம்ஆர்ஐ, சி.டி. ஸ்கேன். எண்டோஸ்கேபி, அப்பர் எஸ்டோஸ்கோபி, லோயர் எண்டோஸ்கோபி உள்ளிட்ட பலதரப்பட்ட கருவிகள் உள்ளன. முன்கூட்டியே வந்து பரிசோதனை செய்துகொண்டால், முகம் மலர்ச்சியுடன் வீடு திரும்பலாம். கேன்சர் நோய்க்கு நல்ல ஆன்ஸர் (விடை) கொடுக்கும் வகையில் சிறப்பான மருத்துவ குழுவினர் கே.ஜி.யில் உள்ளனர்.

இது, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய் என்றாலும், அதனை குணப்படுத்துகிற சாமார்த்தியம் கே.ஜி., மருத்துவ குழுவிடம் உள்ளது. 'தாங்க முடியாத சுமை என்று இவ்வுலகில் எதுவுமே இல்லை.. சுமக்கும் பக்குவம் மனதிற்கு வந்துவிட்டால், பாறையும் ஒரு பஞ்சுதான்...! பயம் வேண்டாம்.. நம்பி வாருங்கள்... வென்று காட்டுவோம்.



பத்மஸ்ரீ டாக்டர் G.பக்தவத்சலம்
தலைவர், கே.ஜி.மருத்துவமனை.

## வலி இல்லாத மார்பக கட்டி மிகவும் ஆபத்தானது..!

**புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் ஹாரீஸ் மாரணா**



ஆண்களுக்கு வாய் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் அதிகம் வருவது போல பெண்களை மார்பக புற்றுநோய் அதிகம் தாக்குகிறது. பெண்களில் 10-ல் 7 பேருக்கு மார்பக புற்றுநோய் வருகிறது. மார்பு, குடல், நுரையீரல் புற்றுநோய் இளம் வயதினரை தாக்குகிறது. அதாவது, 30 வயதுக்குள்ளேயே தாக்குகிறது. இன்றைய காலக்கட்டத்தில், இளம்வயதிலேயே புற்றுநோய் வருவது இயல்பாக மாறிவிட்டது. மார்பில் வலியில்லாத கட்டி, மார்பக புற்றுநோய்க்கான முக்கியமான அறிகுறி. வலியில்லாத கட்டிதான் மிகவும் ஆபத்தானது. கேன்சர் கட்டி வலியில்லாமல்தான் இருக்கும். அடுத்து, மார்பு காம்புகளில் ரத்தம் வருவது, அக்குள் பகுதியில் கட்டி வருவதும் முக்கியமான அறிகுறிகள். எனவே, உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதனை செய்துகொள்வது நல்லது.

தாய்ப்பால் கொடுப்பது, நிறைய குழந்தைகளை பெற்றுக்கொள்வது போன்றவை மார்பக புற்றுநோய் வரும் ஆபத்தை குறைக்கும். அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் வரும் வாய்ப்பு மிக குறைவு. பெண்களின் உடல் பருமன், புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. ரத்தத்தில் சுகர் அளவு அதிகரித்தல், ரத்தஅழுத்தம், முதுகுவலி மட்டுமல்ல, கர்ப்பப்பை புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய், குடல் , கிட்னி புற்றுநோய் வர உடல் தடிமன் முக்கிய காரணி. ஆண்களுக்கு சிறுநீர் கழிக்கும் பகுதியில்கூட புற்றுநோய் வரும். சிறுநீர் அடைத்து அடைத்து போவது, இதற்கான முக்கிய அறிகுறி. இங்கிலாந்து மன்னர் கிங் சார்லஸ், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு போன்றவர்கள்கூட இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் நுரையீரல் புற்றுநோய் வருகிறது. நுரையீரல் புற்றுநோய், புகைப்பிடித்தால்தான் வரும் என்பதில்லை. ஆசனவாய் பகுதியில் தொடர்ந்து ரத்தப்போக்கு இருந்தால் எச்சரிக்கை தேவை. குழந்தைகளைகூட ரத்தப் பற்று நோய் தாக்குகிறது. கே.ஜி.யில், அனைத்து புற்றுநோய்க்கும் அதிநவீன சிகிச்சை வசதி உள்ளது. புற்றுநோய் அணுக்களில் உள்ள ஜீன்களை கண்டுபிடித்து சிகிச்சை அளித்து வருகிறோம் என்கிறார், கே.ஜி மருத்துவமனை புற்றுநோய் அறுவை கிசிச்சை நிபுணர் டாக்டர் ஹாரீஸ் மாரணா.



## மச்சத்தில் புண்ணா... அச்சம் வேண்டாம்..!

**புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் தீபா சுவாமிநாதன்**



கர்ப்பப்பை வாய் கேன்சர் ஏற்பட காரணமாகவுள்ள HPV - Human Papilloma virus காரணமாக தொண்டையிலும் புற்றுநோய் ஏற்படலாம். புகை, புழுதி நிறைந்த இடங்களில் வேலை பார்ப்பவர்கள் அதாவது, கெமிக்கல் டை தொழிலாளர்கள், மரத்தை அறுப்பவர்கள் போன்றவர்களுக்கும் சைனஸ் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

தலை மற்றும் வாய் பகுதியில் புற்றுநோய் இருந்தால் சில அறிகுறிகள் கண்டிப்பாக நமக்கு தென்படும். வாய் பகுதியில் நீண்ட நாட்களாக புண்கள் ஆறாமல் இருப்பது, ஈறு பகுதியில் வீக்கம், பல் துலக்கும்போது ரத்தம் வருவது, உணவை விழுங்குவதில் சிரமம், நாக்கை நீட்ட முடியாமல் போவது, குரல் மாற்றம், எதையாவது சாப்பிட்டால் எரிச்சல் உணர்வு, மூச்சு விடுவதில் சிரமம், தைராய்டு புற்று நோய் என்றால், கழுத்தில் கட்டி உருவாகி பெரிதாகிக்கொண்டே இருப்பது, எடை குறைவது, மாலை நேரத்தில் காய்ச்சல் வருவது போன்றவை முக்கிய அறிகுறிகளாக இருக்கலாம். இந்த அறிகுறிகள் இருந்தால் உடனடியாக, மருத்துவர்களை அணுகுவது நல்லது. தைராய்டு கேன்சரை எளிதாக குணப்படுத்தி விடலாம். அறுவைசிகிச்சை செய்தாலே குணமடைந்து நார்மல் வாழ்க்கைக்கு திரும்பி விடலாம்.

உணவுக்குழாய் தொடங்கும் பகுதி, உமிழ்நீர்சுரப்பி, முகத்தில், தோலில்கூட புற்றுநோய் வர வாய்ப்புள்ளது. மச்சத்தில் மாற்றம் தெரிவது, மச்சத்தில் புண் உருவாகிறது என்றால், உடனே அலர்ட் ஆகி விடவேண்டும். வாய் உள்ளிட்ட புற்று நோய்களை முதல் ஸ்டேஜ்லேயே கண்டுபிடித்துவிட்டால், ஒரு அறுவை சிகிச்சையுடன் முற்றிலும் குணப்படுத்தி விட முடியும். அடுத்தடுத்த ஸ்டேஜ்களில் கண்டுபிடிக்கப்பட்டால் கீமோ தெரபி, ரேடியேசன் போன்ற சிகிச்சைகள் தேவைப்படும்.

ரேடியேசன் என்றால், 'ஏதோ நமக்கு கரண்ட் வைக்கிறார்கள்' என்று நோயாளிகள் நினைத்துக்கொள் கிறார்கள். இது, அந்த கரெண்ட் அல்ல. ஒரே இடத்தில் கதிர்வீச்சு மூலம் சிகிச்சை அளிக்கப்படும் முறை.., அவ்வளவுதான். உடலில் சூடுகூட தெரியாது. வலியும் இருக்காது. எந்த பக்கவிளைவும் இல்லாதது. முழுமையாக குணமடைந்து செல்பவர்களில் 100 பேரில் 95 பேருக்கு புற்றுநோய் திரும்பி வருவதில்லை.

தற்போது, ரோபோட்டிக் சிகிச்சை முறை வந்துவிட்டது. வலி இல்லாமல் ரோபோட்டிக் அறுவை சிகிச்சை மேற்கொண்டு மிக விரைவாக புற்றுநோயில் இருந்து எளிதாக மீண்டு விடலாம்.

அதேபோல், தோல் புற்றுநோய் வந்தால், உடலில் எந்த அடையாளமும் தெரியாத வகையில், சிகிச்சை அளித்து குணப்படுத்தி விடலாம். உடலில் எந்த தழும்பும் இருக்காது. அந்த அளவுக்கு நவீன பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சையும் வந்துவிட்டது.

இவை அனைத்தும் கே.ஜி. மருத்துவமனையில் தரமாக மேற்கொள்ளப் படுகிறது என்கிறார், கழுத்து மற்றும் தொண்டை புற்று நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் தீபா சுவாமிநாதன்.

## வயிறு புற்றுநோயா...? கவலையை விடுங்கள்!

**குடல் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் வி.சி.கல்யாணசுந்தரபாரதி**



இரைப்பை குடல் புற்றுநோய் இந்தியாவில் பரவலாக உள்ளது. இந்தியாவில் 19 பேரில் ஒருவரை இந்த புற்றுநோய் தாக்குகிறது. குடல் புற்றுநோயாக இருந்தால், முதலில் நமக்கு பசியில்தான் மாற்றம் ஏற்படும். மலத்தில் ரத்தம் போவது, வாயில் ரத்தம் வருவது இதன் அறிகுறிகள். கல்லீரல் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டுபிடிப்பது கடினம். கல்லீரல், கணையத்தில் புற்றுநோய் வந்தால், மஞ்சள் காமாலை நோயுடன் அதிகப்படியான உடல் சோர்வு ஏற்படும். கல்லீரல், கணையம் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால், எளிதில் குணமாக்கலாம். இதற்கு, ஆண்டுக்கு ஒரு முறை மாஸ்டர் ஹெல்த் செக்கப் செய்துகொள்ள வேண்டும். அல்ட்ரா ஸ்கேன் செய்தால், கல்லீரல் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விடலாம்.

ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் கல்லீரல், கணைய புற்றுநோயை எளிதாக குணப்படுத்தலாம். இதற்கு, அறுவை சிகிச்சை போதுமானது. வயிற்றை கிழித்து அறுவை சிகிச்சை செய்யவேண்டிய அவசியம் இல்லை. இதற்கான நவீன வசதிகள் வந்துவிட்டது. வலியே இல்லாமல் சிறிய துளை வழியாகவே அறுவை சிகிச்சை செய்துவிடலாம். லேப்ரோஸ்கோபி, ரோபோட்டிக் போன்றவற்றால் வலியே இல்லாமல் புற்றுநோய் ஆபரேஷன் செய்துகொள்ள முடியும். அறுவை சிகிச்சை செய்தாலும், 10 சதவீதம் ரேடியேஷன், கீமோதெரபி சிகிச்சையும் தேவைப்படுகிறது. இதற்கான அனைத்து வசதிகளும் கே.ஜி மருத்துவமனையில் உள்ளது. எனவே, கேன்சரை கண்டு பயம்கொள்ள தேவையில்லை என்கிறார், கே.ஜி. மருத்துவமனை இரைப்பை மற்றும் குடல் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கல்யாண சுந்தரபாரதி.

## புற்றுநோயை விரட்டியடிப்போம்...!

**நுரையீரல் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரபாகரன்**



தொடர்ந்து வறட்டு இருமல் இருப்பது, சளியில் ரத்தம் வருவது போன்றவை நுரையீரல் கேன்சர் நோயின் அறிகுறியாக இருக்கலாம். நுரையீரல் புற்றுநோயில் பல வகைகள் உள்ளன. சிடி ஸ்கேன் எடுத்தால், நுரையீரலில் கட்டி உருவாகியிருந்தால் கண்டுபிடித்து விடலாம். அப்படி, கட்டி உருவாகியிருந்தால், அடுத்து, எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பதை பார்க்க வேண்டும். தசை பரிசோதனை செய்தாலும் கேன்சரை கண்டுபிடித்துவிடலாம். கேன்சர் உடலில் எங்கே வேண்டுமென்றாலும் பரவலாம். நுரையீரல் புற்று நோய், மூளைக்கு, தொண்டைக்குகூட பரவலாம்.

புற்று நோயால் வளர மட்டுமே முடியும். நுரையீரலில் ஒரு செ.மீ அளவுள்ள கட்டி இருந்தால், அடுத்த 6 மாதத்தில் 2 செமீக்கு அளவுக்கு வளர்ந்து விடும். பின்னர் பக்கத்தில் உள்ள உறுப்புகளுக்கு பரவ துவங்கும். எலும்பு, சுவாசகுழாய், உணவுகுழாய், ரத்தகுழாய், போன்றவற்றுக்கு பரவும் வாய்ப்புள்ளது. உடலில் உள்ள செல்களிலும் புற்றுநோய் பரவி விடும். இதனை, பெட் ஸ்கேன் செய்து பார்த்தால் எளிதாக கண்டுபிடித்து விடலாம்.

நுரையீரல் புற்றுநோயில் 4வது ஸ்டேஜில் வந்தால்கூட , அவர்களை காப்பாற்ற கடும் முயற்சி மேற்கொள்வோம். புற்றுநோய் வளர்வதை தடுக்க முடியுமா? வலியை குறைக்க முடியுமா? ரத்த போக்கு இருந்தால், அவற்றை நிறுத்த முடியுமா? என்பதை பற்றி, ஆராய்ந்து அதற்கு தகுந்தமாதிரி சிகிச்சை அளிப்போம். முடிந்த அளவுக்கு சிகிச்சை அளித்து அவர்களை காப்பாற்றவே முயல்வோம். இதற்கான, நவீன வசதிகள் கே.ஜி. மருத்துவமனையில் உள்ளன.

புற்று நோயை குணப்படுத்த அறுவை சிகிச்சை ரேடியேஷன், கீமோ தெரபி மூலம்தான் முடியும். மார்பகத்தில் கட்டி இருந்தால், உடனே அதனை அறுவை சிகிச்சை செய்து விட்டால், எந்த பிரச்னையும் இருக்காது. கேஜி. மருத்துவமனையில் ஒவ்வொரு உறுப்புக்கும் தனித்தன்மை வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர்.

நோயாளிகளை காப்பாற்ற ஒவ்வொருவரும் முயல்வோம். ஒருங்கிணைந்து பணியாற்றி புற்றுநோயை விரட்டியடிப்போம்... என்கிறார், கே.ஜி மருத்துவ மனை நுரையீரல் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரபாகரன்.



# அணுமின் உற்பத்தி... இந்தியாவின் லட்சியத்துக்கு கைகொடுக்கும் ஆஸ்திரேலியா



தூய்மை எரிசக்தி இலக்கை இந்தியா எட்டும் வகையில், அணுமின் உற்பத்திக்கு தேவையான யுரேனியத்தை நீண்ட காலத்திற்கு வழங்க ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம்,பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஆஸ்திரேலியபிரதமர் அந்தோணி அல்பனீஸ் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

பிரதமர்மோடிஇந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியநாடுகளுக்குசுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தோனேஷியாவை அடுத்து இரண்டாவது நாடாக நேற்று அவர் ஆஸ்திரேலியாவை சென்றடைந்தார். பின்னர், ஆஸ்திரேலியபிரதமர் அந்தோணி அல்பனீஸை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து முக்கியபேச்சு நடத்தினார். இதையடுத்து, இரு நாட்டு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, பிரதமர் மோடி 'அணுசக்தி துறையில் இரு நாட்டுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம், நம் நாட்டிற்கு ஆஸ்திரேலியா யுரேனியம் வழங்கும் '' என்று தெரிவித்தார்.

முன்பு, அணு ஆயுத பரவல் தடைசட்டத்தில்கையெழுத்திடாத நாடுகளுக்கு யுரேனியம் விற்க ஆஸ்திரேலியா மறுத்து வந்தது. இதையடுத்து,நம்நாட்டின்ராணுவ பயன்பாடு, அணுசக்திதிட்டங்கள் என தனித்தனியாக பிரித்து, சர்வதேச கண்காணிப்புக்கு உட்படுத்த இந்தியா தரப்பில் யோசனை முன் வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்டு, ஆஸ்திரேலியா யூரேனியம் தர முன் வந்துள்ளது.

தற்போது, இந்தியா ஆண்டுக்கு 8.8 ஜிகாவாட் மின்சாரத்தை அணுசக்தி வழியாக உற்பத்தி செய்கிறது. இந்தியாவில் மொத்தம் 8,780 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட 24 அணு உலைகள் செயல்பாட்டில் உள்ளன. இந்தியாவில் அணுசக்தி மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 155 மில்லியன் முதல் 158 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் எடுக்கப்படுகிறது.

இது, ஒட்டு மொத்த இந்திய மின் உற்பத்தியில் 3 சதவிகிதம் மட்டுமே. யூரேனியம் தட்டுப்பாடு காரணமாகவே, நம்மால் அணுமின் உற்பத்தியை அதிகரிக்க முடியாமல் இருந்தது. 2047ம் ஆண்டுக்குள் இதனை 100 ஜிகாவாட்டாக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

அணுசக்தி வழியான மின்உற்பத்திக்கு பெரிய நிதி முதலீடு மட்டுமல்லாமல், நீண்ட கால யூரேனியம் தேவையும் உள்ளது. இந்தியாவில் யூரேனியம் குறைவாகவே உள்ளது. ஆனால், உலகிலுள்ள யூரேனியத்தில் 28 சதவிகிதம் ஆஸ்திரேலியாவிடத்தில் உள்ளது. அந்நாடு அணு ஆயுதங்களுக்கோ அல்லது அணுமின் நிலையங்களுக்கோ பயன்படுத்துவதில்லை; யுரேனியத்தை முழுமையாக ஏற்றுமதி மட்டுமே செய்கிறது.




## காருக்குள் அழுத புசி ஆனந்த் என்ன நடக்கிறது தவெகவில்?



கடந்த ஜூலை 10 ஆம் தேதி கரூருக்கு முதலமைச்சர் விஜய் சென்றார். கடந்த 2025 செப்டம்பர் 27 ஆம் தேதி கரூரில் விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தது பெரும் சர்ச்சையானது. அப்போது கரூரில் இருந்து வெளியேறிய விஜய், அதன் பின் இப்போதுதான் முதல் முறையாக முதல்வராகி கரூர் வந்தார். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை முடித்துவிட்டு கரூர் கலெக்டர் அலுவலகத்தில், கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினர் 32 பேருக்கு அரசுப் பணிக்கான ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் விஜயலட்சுமி, எம்.பி. ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தேர்தலுக்கு முன்பு கரூர் மக்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகனும், தவெகவின் பொதுச் செயலாளர் புசி ஆனந்தும்தான். அந்த கூட்டத்துக்கான ஏற்பாடுகள் செய்ததற்காக இந்த இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புசி ஆனந்த் தலைமறைவாக திரிந்தார். இப்படிப்பட்ட பின்னணியில் கட்சிக்காக உயிரிழந்தவர்களுக்கு அரசுப் பணி ஆணை கொடுக்கும் நிகழ்வில், கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான புசி ஆனந்த் அழைக்கப்படவில்லை.

கரூர் கலெக்டர் அலுவலகத்தில் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த நிலையில் அந்நிகழ்ச்சியில் பங்கேற்காத அமைச்சர் புசி ஆனந்த் கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் காரில் இருந்தபடியே அழுதுகொண்டிருந்தார். கரூர் மாவட்டச் செயலாளர் மதியும் கண் கலங்க நின்றுகொண்டிருந்தார். ஆதவ் அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி ஆகியோர் சேர்ந்து புசிஆனந்தை ஓரங்கட்டுகின்றனர். விஜய் ரசிகர் மன்றம், மக்கள் இயக்கம், அரசியல் கட்சி என படிப்படியாக வளர்த்தெடுத்த புசி ஆனந்த் காரில் அழுதுகொண்டிருக்கிறார். நேற்று வந்த ஆதவ் அர்ஜூனா மேடையில் அமர்ந்துகொண்டிருக்கிறார் என்கிறார்கள் தவெக நிர்வாகிகள்.

## நார்வே வீரர் ஹாலண்ட் சாப்பிடும் நார்வே சால்மன் மீனில் என்ன ஸ்பெஷல்?

அமெரிக்காவில் நடந்து வரும் உலகக் கோப்பை தொடரில் பங்கேற்றுள்ள நார்வே அணி தங்களுக்கான உணவுப் பொருட்களை கையோடு எடுத்து சென்றுள்ளது. கிட்டத்தட்ட 580 கிலோ உணவுப் பொருட்களை தங்கள் சொந்த நாட்டில் இருந்து நார்வே கொண்டு சென்றுள்ளது. இதில், 380 கிலோ நார்வே சால்மன் மீன்களும் அடங்கும். நார்வே வீரர்களுக்கு சமையல் செய்து கொடுக்க, பிரத்யேகமாக நான்கு சமையல் கலைஞர்களும் வீரர்களுடன் சென்றுள்ளனர்.

நார்வே அணியின் நட்சத்திர வீரர் எர்லிங் ஹாலண்ட் மட்டும் நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் கிலோ கலோரி உணவு எடுத்துக் கொள்கிறார். சாதாரணமாக ஆண்களுக்கு தினசரி 2,500 கலோரி உணவு எடுத்துக் கொண்டால் போதுமானது. ஆனால், அதிக உடல் திறன் தேவைக்காக ஹாலண்ட் நாள் ஒன்றுக்கு இவ்வளவு கலோரி உணவு எடுக்கிறார்.

நார்வேயின் சால்மன் பிரத்யேகமான சுவை, தரம் மற்றும் ஊட்டச்சத்துகளுக்காக உலகளவில் மிகவும் புகழ்பெற்ற மீன் வகை. நார்வேயின் குளிர்ந்த, தூய்மையான அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் நீர் இந்த மீன்கள் செழித்து வளர உதவியாக இருக்கிறது. இந்த மீன்களின் சதையில் எண்ணெய் மற்றும் கொழுப்புச் சத்துகள் மிகச் சீராகப் பரவியிருக்கும். நார்வே சால்மன் மிகக் கடுமையான சுகாதார சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இதனால், இந்த மீனில் எந்தவிதமான தொற்றுநோய்க் கிருமிகளும் இருக்காது. இதனால், சமைக்காமல் பச்சையாகவே சாப்பிடலாம். இந்த மீனை வெட்டினால் அல்வா துண்டு போல இளஞ்சிவப்பு வண்ணத்தில் இருக்கும்.

உடலுக்கு மிகவும் முக்கியமான ஒமேகா-3 கொழுப்பு புரோட்டீன், மற்றும் வைட்டமின்கள் இந்த மீனில் எராளமாக உள்ளது. இந்த மீன்களை சாப்பிடுவது இதயத்துக்கு மிகவும் நல்லது. இந்த மீனை வாயில் வைத்தாலே அல்வா துண்டு போல கரைந்து விடும். அதனால் , உலகளவில் நார்வே சால்மன் மீன்களுக்கு அதிக கிராக்கி உண்டு

## அம்பாள் அறக்கட்டளை சார்பில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

### அமைச்சர் சம்பத்குமார் பங்கேற்பு



கோவை கணபதி பகுதியில் அமைந்துள்ள அரசு மேல்நிலை பள்ளியில் பொது தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். செல்வம் ஏஜென்சீஸ் நிர்வாக இயக்குனர் மற்றும் அம்பாள் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் நந்தகுமார் நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

அப்போது, மார்ச் 2026ல் நடைபெற்ற 10 மற்றும் 12ம் வகுப்பு பொது தேர்வுகளில் முதல் 3 இடங்களைப் பிடித்த இப்பள்ளியை சேர்ந்த மாணவர்களுக்கு "செல்வம் ஏஜென்சீஸ் என். துரைசாமி நினைவு கல்வி உதவித்தொகை" வழங்கப்பட்டது.

மொத்தம் 8 மாணவிகள் இந்த உதவித்தொகையை அமைச்சர் முன்னிலையில் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் மாவட்ட கல்வி அதிகாரி கோமதி, பள்ளி முதல்வர் சிவக்குமார், பள்ளி வளர்ச்சி குழு தலைவர் கமலா மற்றும் குழுவின் பிற நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## ஈ.ஏ.எஸ்.ஏ. பொறியியல் கல்லூரியில் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி முகாம்



கோவை நவக்கரையில் உள்ள ஈ.ஏ.எஸ்.ஏ. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான மேம்பாட்டுப் பயிற்சி முகாம் நிறைவடைந்தது.

இந்தப்பயிற்சிமுகாமில், தகவல் பரிமாற்றத் திறன், தலைமைத்துவம், கல்லூரி கலாச்சாரம், மனிதவளக் கொள்கை, மாணவர்-ஆசிரியர் விதிமுறைகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, காப்புரிமை, குழு ஆராய்ச்சி, பாடத்திட்ட வடிவமைப்பு உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிறைவு விழாவில் கல்லூரி தலைவர் டி.ஈ. சுஜாதா தலைமை வகித்தார். செயலாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டி.ஈ. அஜித், தாளாளர் டி.ஈ. ஆதர்ஷ் ஆகியோர் உரையாற்றினர். பயிற்சிமுகாமில் பங்கேற்ற பேராசிரியர்களுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் ராபர்ட் கென்னடி பங்கேற்புச் சான்றிதழ்களை வழங்கினார்.

## ஆஸ்திரேலியாவின் பிக் பேஷ் தொடர் 2026 சீசன் சென்னையில் தொடங்குகிறது




ஆஸ்திரேலியாவின் பிக் பேஷ் கிரிக்கெட் தொடர் சென்னையில் நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு விளையாட்டு தொடரைச் சேர்ந்த ஆட்டம் ஒன்று இந்தியாவில் நடைபெறவுள்ளது இதுவே முதன் முறை.

இந்திய பிரதமர் மோடியின் ஆஸ்திரேலிய விசிட்டை முன்னிட்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, மெல்பர்ன் ரினாகேட்ஸ் நடப்பு பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியுடன் மோதும் தொடக்க ஆட்டம், வரும் டிசம்பர் 12ம் தேதி சென்னை எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெறுகிறது.

இது குறித்து மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இந்திய பிரதமர் மோடியுடன் இணைந்து ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானேஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''இந்தியாவுடன் அன்பு மற்றும் விளையாட்டு சகோதரத்துவத்தை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். இது மகிழ்ச்சியை மட்டும் தரும் விஷயமல்ல. முதலீடு, சுற்றுலா, வர்த்தகம் அனைத்தையும் மேம்படுத்தும்" என்றார்.

கிரிக்கெட் ஆஸ்திரேலியா அமைப்பின் பிக் பேஷ் கிரிக்கெட் தொடரின் பொதுமேலாளருமான அலிஸ்டெய்ர் டாப்சன், '' இந்தியா முழுவதும் குறிப்பாக சென்னையில் கிரிக்கெட்டுக்கு என்று தனி உலகமே உள்ளது. இதனால், பிக் பேஷ் ஆட்டத்தை காண கூட்டம் அலைமோதும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியா கிரிக்கெட்டுக்கு இதயம் போன்றது.

பெர்த் அணி அங்கு வந்து ஆடுவது, அந்த அணியின் வருங்காலத்துக்கு மிகவும் நல்லது. இந்த முடிவை முழு மனதுடன் வரவேற்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

பிக்பேஷ் தொடரின் 16வது சீசனின் ( 2026-27) முதல் ஆட்டம் சென்னையில் இருந்து தொடங்குகிறது. ஆஸ்திரேலியாவின் பிக் பேஷ் தொடரின் ஒரு ஆட்டம் வெளிநாட்டு மண்ணில் நடைபெறுவதும் இதுதான் முதல்முறை.

## பெல்ஜியம் வீழ்ந்தது; அரையிறுதியில் பிரான்சை சந்திக்கும் ஸ்பெயின்

உலகக் கோப்பையில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி பெல்ஜியத்தை வீழ்த்தியது. அரையிறுதியில் பிரான்ஸ் அணியுடன் மோதுகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த இந்த ஆட்டத்தில் 30வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் ரூயிஸ் முதல் கோல் அடித்தார். அடுத்து, 41வது நிமிடத்தில் பெல்ஜியம் பதில் கோல் திருப்பியது சார்லஸ் கெட்டிராலே இந்த கோலை அடித்தார். இதனால், பிற்பாதி ஆட்டம் சூடுபிடித்தது. எனினும், ஸ்பெயின் அணியின் ஆதிக்கமே இருந்தது. மாற்று ஆட்டுக்காரராக களம் இறங்கிய மொரினோ 88வது நிமிடத்தில் ஸ்பெயினுக்கான இரண்டாவது கோலை அடித்து, வெற்றி தேடி கொடுத்தார்.

அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி வலுவான பிரான்ஸ் அணியை சந்திக்கிறது. வரும் 15ம் தேதி டல்லாஸ் நகரில் நடக்கும் முதல் அரையிறுதியில் ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதவுள்ளன.

## சிங்கத்தின் பிடியில் 30 நிமிடங்கள் சிக்கிய விவசாயி தலையை தடவிக்கொடுத்து உயிர் தப்பிய அதிர்ச்சி சம்பவம்



குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் வனப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆசியச் சிங்கங்களின் முக்கிய வாழ்விடமாக விளங்கிவருகின்றன. அண்மைக் காலமாக உணவு மற்றும் வாழ்விடப் பற்றாக்குறை காரணமாக சிங்கங்கள் அடிக்கடி அருகிலுள்ள கிராமங்களுக்குள் நுழையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், பாவ்நகர் மாவட்டம், பாலிதானா தாலுகாவிற்கு உட்பட்ட கராஜியா கிராமத்தில் நேற்று முன்தினம் காலை பரபரப்பான சம்பவம் அரங்கேறியது.

அந்த கிராமத்தைச் சேர்ந்த கலுபாய் போகாபாய் பர்மர் என்பவர், தனது மாட்டுத் தொழுவத்தில் மாடுகளுக்கு தீவனம் வழங்கிக் கொண்டிருந்தார். காலை சுமார் 8.30 மணியளவில், அங்கு பதுங்கியிருந்த ஆசியச் சிங்கம் திடீரென அவர் மீது பாய்ந்து தாக்கியது.

தாக்குதலின் போது, சிங்கம் தனது முன் கால்களால் பர்மரின் கால்களை அழுத்திப் பிடித்ததுடன், அவரது ஒரு கையை தனது வாயில் கவ்விப் பிடித்திருந்தது. இதனால் அவர் அசைய முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், பதற்றமடையாமல் அமைதியாக இருந்த பர்மர், சிங்கத்தை மேலும் ஆத்திரப்படுத்தாமல் அதன் தலையை மெதுவாக தடவிக்கொடுத்ததாக கூறப்படுகிறது. சுமார் 30 நிமிடங்கள் அவர் சிங்கத்தின் பிடியிலேயே இருந்த நிலையில், பின்னர் அந்த சிங்கம் அவரை விட்டுவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றது.

இதையடுத்து, அவரது அலறல் சத்தம் கேட்டு அங்கு விரைந்து வந்த கிராம மக்கள், காயமடைந்த பர்மரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவருக்கு கைகள் மற்றும் கால்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தாலும், உயிருக்கு ஆபத்துஇல்லைஎனமருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும், கிர் வனப்பகுதியைஒட்டியகிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், கால்நடைகளை பராமரிக்கும்போது தனியாக செல்ல வேண்டாம் என்றும் வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## கேம்ஃபோர்டு இன்டர்நேஷனல் பள்ளியில் மாணவர் மன்ற பதவியேற்பு விழா




தி கோவை ஹெரால்டு

கோவை கேம்ஃபோர்டு இன்டர்நேஷனல் பள்ளியின் 202627 கல்வியாண்டிற்கான 17-வது மாணவர் மன்ற பதவியேற்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு இந்திய விமானப்படையின் ஓய்வு பெற்ற ஏர் மார்ஷல் எம். எஸ்.ஜி. மேனன் தலைமை தாங்கினார். பள்ளியின் தலைவர் என். அருள்ரமேஷ், தாளாளர் பூங்கோதை அருள் ரமேஷ் மற்றும் முதல்வர் டாக்டர் பூனம் சியால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவர் தலைவராக தன்மய், மாணவிகள் தலைவராக ருஹின் பண்டாரி ஆகியோர் பதவியேற்று உறுதிமொழி ஏற்றனர். அவர்களுக்கு அதிகாரப்பூர்வ பட்டைகள் மற்றும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

# அரசு வழக்கறிஞர்கள் நியமனம்... தவெக வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா?

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்தஉடன்ஏற்கனவேகடந்த திமுக ஆட்சியில் இருந்த கிட்டத் தட்ட அனைத்து அரசு வழக்கறி ஞர்களையும் விடுவித்தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் அட்வகேட் ஜெனரலாக இதற்கு முந்தைய எடப்பாடி ஆட்சியில் இதே பதவியை வகித்த மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயணன் நியமிக்கப்பட்டார். கூடுதல் அட்வகேட் ஜெனரலாக பால சுப்ரமணியன் நியமிக்கப்பட்டார்.

அப்போது அட்வகேட் ஜெனரல் விஜய் நாராயணனிடம், உங்களுக்கு கீழே இருக்கின்ற முக்கியமான அரசு வழக்கறிஞர் பணியிடங்களை நீங்களே நிரப்பிக் கொள்ளுங்கள் என்று சட்ட அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்திருக்கிறார் என கூறுகிறார்கள்.

இந்தநிலையில்தான்பல்வேறு மாவட்டங்களில் இருக்கிற நீதிமன்றங்களில் அரசு வழக்கறி ஞர்கள் இல்லாததால் பல வழக்குகள் தேக்கமடைந்திருக் கின்றன. இதனால் நீதிபதிகள் அதிருப்தி வெளியிட்டு வருகி றார்கள்.

இந்த காரணத்தால் தற்காலிகமாக அனைத்து அரசு வழக்கறிஞர் பணியிடங்களையும் நிரப்புவதற்காக சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார். அரசு வழக்கறிஞர் நியமனங்களின் போது தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் அமைச்சர் பு.சி. ஆனந்த் சட்ட அமைச்சர் நிர்மல் குமாரிடம், ' நம்ம கட்சிக்காக பாடுபட்ட பல வழக்கறிஞர்கள் இருக்காங்க. அவங்களுக்கு அரசு வழக்கறிஞர்கள் பணியில் முன்னுரிமை கொடுக்கணும்' என்று தெரிவித்துள்ளார். அதற்கு சட்ட அமைச்சர் நிர்மல் குமாரோ, 'அரசு வழக்கறிஞர்கள் நியமன அவதாரத்தில் தலைமைச் செயலாளர்தான் முடிவெடுக்கிறார். நான் எந்த வகையிலும் தலையிடுவதில்லை' என்று அமைச்சர் ஆனந்திடம் கூறிவிட்டாராம்.

இதைக்கேட்டுஅதிர்ந்துபோன அமைச்சர் புஸி ஆனந்த் தனக்கு நெருக்கமானவர்களிடம்... 'என்னுடைய துறையில் இப்போது 61 திட்ட இயக்குனர்கள் நியமிச்சிருக்கேன். இவர்கள் அனைவரின் பெயர்களையும் உளவுத்துறைக்கு அனுப்பி அவர்களுடைய பின்னணி சரியா இருக்கா என உறுதிப்படுத்திக் கொண்டுதான் அந்த பதவியை கொடுத்திருக்கேன். ஆனால் அரசு வழக்கறிஞர் நியமனங்களில் அப்படி இல்ல. நம்ம கட்சிக்காக தியாகம் செய்த பல நேர்மையான திறமையான வழக்கறிஞர்கள் இருக்காங்க. அவங்களுக்கான அங்கீகாரம் நம்ம ஆட்சியில் தான் கொடுக்கப்படணும்.

ஆனால் நிர்மல் குமார், ஜான் ஆரோக்கியசாமி, ஆதவ் அர்ஜுனா, விஷ்ணு ரெட்டி இவங்க எல்லாம் சேர்ந்து ஒரு லாபி பண்ணிட்டு இருக்காங்க. கட்சிக்காரர்களுக்காக பரிந்து பேசும் என்ன ஒதுக்கிடறாங்க' என்றுகோட்டையிலேயேஅமர்ந்து தன்னை சந்திக்க வருபவர்களிடம் புலம்பி கொண்டிருக்கிறார் புசி ஆனந்த்.




LAKSHAKA TEX LLP

# ‘சுப்ரமணியபுரம்’ பட ஹீரோயின் இரண்டாவது திருமணம்



இயக்குநர் சசிகுமார் இயக்கத்தில் கடந்த 2008ம் ஆண்டு வெளிவந்த சுப்ரமணியபுரம்படம்சூப்பர் ஹிட் அடித்தது. ஜெய், சுவாதி, சமுத்திரக்கனி, கஞ்சா கறுப்பு ஆகியோர் இந்த படத்தில் நடித்திருந்தனர். இயல்பான கதை, நடிப்புக்காக இத்திரைப்படம் பேசப்பட்டது. இந்த படத்தில் ஹீரோயினாக நடித்த சுவாதியின் நடிப்பும் வெகுவாக ரசிக்கப்பட்டது.

நடிகை சுவாதி கேரளாவைச் சேர்ந்த பைலட் விகாஷ் வாசு என்பவரை கடந்த 2018ம் ஆண்டு மணந்தார். ஹைதராபாத்தில் திருமணமும் கொச்சியில் வரவேற்பு நிகழ்ச்சியும் நடந்தது. இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்தனர். மீடியாவில் எந்த செய்தி எதுவும் வெளியாகவில்லை. இருவருமே, விவாகரத்து குறித்து வெளிப்படையாக அறிவிக்கவில்லை. விவாகரத்துக்குப் பின்னர், தெலுங்கு படங்களில் சுவாதி நடித்து வந்தார்.

இந்தநிலையில், சுவாதி இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார். சமீபத்தில் அவர் நடித்த திரைப்படமான ‘மந்த் ஆஃப் மது’-வை இயக்கிய இயக்குநர் ஸ்ரீகாந்த் நகோத்தியை சுவாதி இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார். இது தொடர்பான புகைப்படங்களை தனது இன்ஸ்டா பக்கத்தில் சுவாதி வெளியிட்டுள்ளார். இதையடுத்து, அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

சுவாதி ரெட்டி ஆந்திராவைச் சேர்ந்தவர். தெலுங்கு மா டி.வியில் ஒளிபரப்பான கலர்ஸ் நிகழ்ச்சியின் மூலம் பாப்புலாரானவர். கலர்ஸ் சுவாதி என்ற செல்லப் பெயரும் அவருக்கு உண்டு. பின்னர், சுப்ரமணியபுரம் தமிழ்ப்படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். தனது, தனிப்பட்ட வாழ்க்கையை பற்றி மீடியாக்களிடம் பேசிக் கொள்ள சுவாதி விரும்புவதில்லை.

# பிரிட்டானியா பிஸ்கட்களில் திருக்குறள்... தமிழ் பற்றா... விளம்பரயுத்தியா?



பிரிட்டானியா நிறுவனத் தின் மில்க்பிகிஸ் பிஸ் கட்டின் சந்தை மதிப்பு மட்டும் ஆண்டுக்கு ஆயி ரம் கோடி. இதில்,90 சத விகிதம் தமிழகத்தைச் சார்ந்துள்ளது.

தமிழர்கள் காபி, பால், டீ போன்றவற்றுடன் சேர்த்து மில்க்பிகிஸ் பிஸ்கட்டை சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தற்போது, மில்க் பிகிஸின் பிரபலத்தைக் அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளிடத்தில் திருக்குறளைக் கொண்டு சேர்க்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு, திருக்குறல் சேலஞ்ச் என்று பெயரிடப் பட்டுள்ளது. அதாவது, 30 ரூபாய் கொண்ட பிஸ்கட் பாக் கெட்டுகளை வாங்கினால், திருகுறளில் இடம்பெற்றுள்ள வார்த்தை கள் இடம் பெற்றுள்ளது. ஆனால், ஒரு பாக்கெட்டில் இரு பிஸ்கட்களில் மட்டுமே அந்த வார்த்தைகள் இடம் பெற்றிருக்கும். இதனால், நிறைய பாக்கெட்டுகளை வாங்கினால் மட்டுமே, ஒரு திருக்குறளை முழுமையாக குழந்தைகள் உருவாக்க முடியும்.

ஒரு குறள் இரண்டு வரிகளையும், மொத்தம் ஏழு சொற்களையும் கொண்டது. சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் திருக்குறள் அச்சிடப்பட்ட பிஸ்கட் பாக்கெட்டுகள் விற்பனைக்கு வந்ததன. விற்பனை வழக்கமான அளவிலேயே உள்ளது. சில குழந்தைகள் இதைப் பற்றி அறிந்து கொண்டு திருக்குறள் பிஸ்கட்டுகளை பெற்றோருடன் வந்து வாங்கிச் செல்கின்றனர்.

தமிழ் மக்களிடத்திலுள்ள தமிழ்ப்பற்றை கருத்தில் கொண்டு , பிரிட்டானியா நிறுவனம் இந்த விளம்பர யுத்தியை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.

ஒரே பாக்கெட்டில் 7 பிஸ்கட்களில் திருக்குறளின் வார்த்தைகள் இடம் பெற்றால், பரவியில்லை. அதற்குப் பதிலாக இரண்டு வார்த்தைகள் மட்டுமே ஒரு பிஸ்கட் பாக்கெட்டில் இடம் பெற்றிருப்பது, விற்பனையை அதிகரிக்கும் நோக்கமே தவிர வேறு ஒன்றுமில்லை என்றும் சிலர் விமர்சித்துள்ளனர்.

# தமிழக அமைச்சசராகிறார் சௌமியா அன்புமணி?

சமீபத்தில் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி நீர்வளத்துறை அமைச்சர் புசி ஆனந்தை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது அன்புமணியின் மனைவியான சட்டமன்ற உறுப்பினர் சௌமியாவும் உடன் இருந்தார். இந்த சந்திப்பில் காவிரி பிரச்சினை உள்ளிட்ட தமிழ்நாட்டின் முக்கியமான நீர் நிலை பிரச்சினைகள் பற்றி அமைச்சர் ஆனந்திடம் விளக்கியிருக்கிறார் அன்புமணி.

மேலும் இது தொடர்பாக முதலமைச்சர் விஜயை சந்திக்கவும் நேரம் கேட்டுள்ளார் அன்புமணி. அமைச்சர் புசி ஆனந்த் அனபுமணிக்கு கொடுத்த முக்கியத்துவம் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் விசிகவை யோசிக்க வைத்திருக்கிறது. தவெக கூட்டணி பற்றி திருமாவளவன் முன்னுக்குப்பின் முரணாக பல கருத்துகளை கூறிவரும் நிலையில்... அன்புமணிக்கு தலைமைச் செயலகத்தில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் வேறு மாதிரியான விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது விசிகவுக்கு பதில் கூட்டணியில் பாமக இடம்பெறுமா என்பதுதான் அது. ஒருவேளை, அன்புமணி விஜய் கூட்டணியில் சேர்ந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அப்படி ஒரு நிலை வந்தால் சௌமியாவை அமைச்சராக்க தயாராக இருக்கிறார் அன்புமணி எனகிற தகவலும் உள்ளது.

# மேற்குத்தொடர்ச்சி மலை காப்பாற்றப்படுமா...

## Ecologically sensitive பகுதியாக அறிவிக்கப்படுமா?



கேரளம் மாநிலம் வயநாடு, கோழிக்கோடு மாவட்டங்களை இணைக்கும் வகையில் சுரங்கப்பாதை நடைபெற்று வரும் நிலையில் மேப்பாடி அடுத்த கல்லாடிப் பகுதியில் கடந்த 7ம் தேதி கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மண்ணில் புதைந்து 7 தொழிலாளர்கள் பலியான நிலையில் காணாமல் போனவர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். சுரங்கப் பணியின் போது தோண்டப்பட்ட மண் குவியலை அருகிலேயே வைத்திருந்ததால் மழையில் அது நிலைத்தன்மை இழந்து சரிந்ததால் இவ்விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. கடந்த 2024ம் ஆண்டு இதே வயநாட்டில் பெய்த பெருமழையில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக 400க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிர் இழந்தனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள வயநாடு இவ்வாறு தொடர் பாதிப்புகளுக்கு உள்ளாவதற்கு மனித தலையீடுகளே முக்கிய காரணமாய் உள்ளது. இந்த பகுதியில் 1950 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் 62% வனப்பகுதி அழிக்கப்பட்டது. இதனால், மண்ணில் பிடிப்பு தன்மை இல்லாமல் பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதியாக மாறிப்போனது. சாலைகள், சுரங்கங்கள், ரிசார்ட்டுகள், குடியிருப்புகள், செங்குத்தான சரிவுகளில் கட்டுமானங்கள், தேயிலை, ஏலக்காய் தோட்டங்களின் பெருக்கம் என பல்வேறு காரணங்களால் இப்பகுதி மரணப்பள்ளதாக்காக மாறியுள்ளது.

தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல் போன்ற பகுதிகளும் இதனை போன்ற புவியியல் தன்மை கொண்டவை. நீலகிரியில் 2009ம் ஆண்டு பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. குவாரி சுரங்கங்கள், காடழிப்பு, சுற்றுலா விரிவாக்கம், சாலை விரிவாக்கம், ரிசார்ட்டுகள், கட்டுமானங்கள் என கட்டுப்பாடற்ற திட்டங்களால் இப்பகுதிகளிலும் பேரழிவுகள் உருவாகும் சூழலை எதிர்நோக்கி உள்ளோம். வயநாட்டில் நடைபெற்று வரும் சம்பவங்கள் நமக்கு படிப்பினைகள் தந்தபோதிலும் அதன் மூலம் பாடம் கற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை என்பதே உண்மை.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத் ஆகிய 6 மாநிலங்களில் மேற்கு தொடர்ச்சி மலை பரவியுள்ளது. இதனை பாதுகாக்க தவறினால் பல்லுயிர் பெருக்கம், நீர்வளம், விவசாயம், காலநிலை சமநிலை அடியோடு பாதிப்பு அடையும். எனவே தான் 1,29,037 சதுர கி.மீ கொண்ட இந்த மலையை தென்னிந்தியாவின் நுரையீரல் என்கிறோம். இதை பாதுகாக்கத் தவறினால் சுற்றுசூழல் பாதிப்புகள், காலநிலை மாற்றங்கள் மட்டுமில்லாது வயநாடு போன்ற பாதிப்புகள் தொடர்வதும் தடுக்க இயலாததாகிப் போகும்.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் 2010ம் ஆண்டு பேராசிரியர் மாதவ் காட்கில் தலைமையில் அமைத்த 14 பேர் கொண்ட குழு கடந்த 2011ம் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தது. இதன்படி மேற்கு தொடர்ச்சி மலையின் முழுப்பகுதியினையும் Ecologically sensitive Area ஆக அறிவிக்க பரிந்துரை செய்தது. பெரிய அணைகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், சாலை மற்றும் ரயில் திட்டங்கள் இப்பகுதியில் செயல்படுத்திட தடை விதித்தது. குறிப்பிட்ட அறிக்கை கடுமையாக உள்ளதாக சில மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் பேரில் 2012ம் ஆண்டு டாக்டர் கே. கஸ்தூரிரங்கன் தலைமையில் 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு 2013ம் அண்டு அறிக்கை சமர்ப்பித்தது. அதன்படி 37% பகுதி (சுமார் 60,000 சதுரகி.மீ) ESA என அறிவிக்க பரிந்துரை செய்தது. காட்கில் அறிக்கையினை விட கஸ்தூரிரங்கன் அறிக்கை மிதமான வகையில் சில பரிந்துரைகள் அளித்து உள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி பகுதிகளில் 6,914 சதுரகி.மீ பரப்பளவு ESA வாக பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இப்பரிந்துரைகள் அடிப்படையில் மத்திய அரசு பல வரைவு அறிவிப்புகள் வெளியிட்டது.

இதற்கு கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் அமலாக்ம் செய்யப்படவில்லை. சுற்றுசூழல், பல்லுயிர், காலநிலை, நீர் ஆதாரம் உள்ளிட்டவை பாதிப்புகள் அடைவதை தவிர்க்க காட்கில் குழு பரிந்துரைகளை அமல்படுத்தி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை காப்பது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

FOR NEWS Publication
9244317182
04223147962



# மரங்களை அடிப்படையாக கொண்ட விவசாயம் தான் இந்தியாவின் வருங்காலத்தை நிலை நிறுத்தும்

## ஐ.நா விருது பெற்ற இயற்கை விவசாயி வள்ளுவன் தகவல்

தி கோவை ஹெரால்டு

'மரங்களை அடிப்படையாக கொண்ட விவசாயம் தான் இந்தியாவின் வருங்காலத்தை நிலை நிறுத்தும்', என, இயற்கை விவசாயி வள்ளுவன் பேசினார்.

கோவை கொடிசியா தொழிற் கண்காட்சி வளாகத்தில், இந்திய தொழில் வர்த்தக சபை சார்பில், "உழவே தலை 2.0" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற **ஐ.நா விருது பெற்ற இயற்கை விவசாயி வள்ளுவன்** பேசியதாவது:

தமிழ்நாட்டின் விவசாயம் 60-70 ஆண்டுகளில் தலைகீழாக மாறியுள்ளது. உலகில் 365 நாட்களும் விவசாயம் செய்ய வசதியான, தகுதியான நிலங்கள் இந்தியாவின் தென் மாநிலங்கள் தான். வளமான மண்ணை கொண்ட தமிழ்நாட்டின் கரிம வளம் 2-3 சதவீதம் இருந்தது. தற்போது இது, 0.5க்கும் கீழ் உள்ளது. தவறான வேளாண்மை முறை புகுத்தப்பட்டுள்ளதால், இந்த அங்கக கரிம வளம் குறைந்துள்ளது.

ஒரு கிலோ யூரியாவில் 50 கிலோ விளைந்த கோதுமை, இன்று 5 கிலோவாக குறைந்து விட்டது. மண்ணை மாற்ற, மண் வளத்தை அதிகரிக்க நாட்டு மாட்டு சாணம் பயன்படுத்த வேண்டும். மரங்களை அடிப்படையாக கொண்ட விவசாயம் மிகவும் அவசியமாகிறது. விவசாயம் அழிவை நோக்கி செல்ல ஒரு பயிர் கலாச்சாரம் தான் காரணியாக உள்ளது.

மரங்களை அடிப்படையாக கொண்ட விவசாயம் தான் இந்தியாவின் வருங்காலத்தை நிலை நிறுத்தும். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கக கரிம நுண்ணுயிர் கொண்டதாக மாற்றியதற்கான இந்திய அளவில் முதல் முதலாக பரிசு பெற்றுள்ளோம்.



■ கருத்தங்கினை குத்து விளக்கேற்றி தொடங்கி வைக்கிறார் ஐசிசிஐ முன்னாள் தலைவர் வனிதா மோகன். உடன் ஐ.நா. அங்கீகாரம் பெற்ற விவசாயி வள்ளுவன், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சபை தலைவர் ராஜேஷ் பி. லுண்ட், கொடிசியா தலைவர் ரங்கசாமி கருத்தரங்க ஆலோசகர் மணி சுந்தர், மற்றும் ஐசிசிஐ கௌரவ செயலாளரும் உழவே தலை 8.0 ஒருங்கிணைப்பாளருமான பிரதீப் ஆகியோர்.




■ "உழவே தலை 8.0" கருத்தரங்கில், சிறப்பு விருந்தினரான ஐ.நா. அங்கீகாரம் பெற்ற விவசாயி வள்ளுவனுக்கு இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சபை தலைவர் ராஜேஷ் பி. லுண்ட் நினைவு பரிசு வழங்கினார்.

அங்கக கரிமங்களின் அளவு 3.03 என்ற அளவிற்கு உயர்த்தி இருந்தாலும், 1.56 என்ற அளவில் 3ம் பரிசையே பெற முடிந்தது. பங்கேற்ற 164 நாடுகளில் முதல் பரிசை சீனா பெற்றது.

இவ்வாறு, அவர் பேசினார்.

**இந்திய தொழில் வர்த்தக சபை(ஐசிசிஐ) கோவை தலைவர் ராஜேஷ் லுந்த்** பேசும் போது, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான விவசாய முறைகள் மூலம் வேளாண் துறை வேகமாக மாற்றமடைந்து வருகிறது. இந்த மாற்றங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும், புதிய தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளவும், விவசாயிகள், புதுமையாளர்கள், தொழில் துறையினர் ஆகியோர் ஒரே இடத்தில் சந்தித்து கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது மிகவும் அவசியமாக உள்ளது.

அந்த நோக்கத்துடன், வனிதா மோகன் தலைமையில் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 'உழவே தலை' (Uzhave Thalai) தொடங்கப்பட்டது. தற்போது அது தனது எட்டாவது ஆண்டில் வெற்றிகரமாக பயணித்து வருகிறது.

புதுமையான வேளாண் தொழில்நுட்பங்கள், சிறந்த விவசாய நடைமுறைகள் மற்றும் புதிய யோசனைகளை பகிர்ந்து கொள்ளும் மதிப்புமிக்க வேளாண் தளமாக 'உழவே தலை' இன்று வளர்ச்சி பெற்றுள்ளது," என்றார்.

**கருத்தரங்கின் ஆலோசகர் மணி சுந்தர்**, இந்த ஆண்டு முதல் "உழவே தலை" குழுவின் கற்றல் முயற்சியை மேலும் விரிவுபடுத்தும் வகையில், வேளாண் கருத்தரங்குகளுடன் இணைந்து விவசாயப் பண்ணைகளுக்கான களப்பயணங்களும் நடத்தப்பட உள்ளதாக அறிவித்தார்.

அக்ரி இன்டெக்ஸ் 2026-இன் ஒரு பகுதியாக நடைபெற்ற "உழவே தலை 8.0" கருத்தரங்கில், ஐசிசிஐ கௌரவ செயலாளரும், 'உழவே தலை 8.0' ஒருங்கிணைப்பாளர் பிரதீப், ஐசிசிஐ முன்னாள் தலைவர் வனிதா மோகன், வேளாண் குழு உறுப்பினர் சரவணன் சந்திரசேகரன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.







Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)